# திருச்சிற்றம்பலம்

## மகா மகோ பாத்யாய உ.வே.சா.

கட்டுரையாளர்: தி.பா.வாசுதேவன்., எம்., ஏ.,பி.எட்.,

**(The great Teacher or greatest teachers)**

## இனிய தமிழ் நெஞ்சங்களே!

நவையேறும் நெஞ்சினோன் நற்றமிழைக் கற்றே
அவையேற வைத்தருளும் அண்ணல் - சுவைஏறு
செந்தமிழ் பன்னூல் விளக்கும் சீர்ச்சாமி நாதகுரு
அத்துணர்த்தாள் சென்னிக் கணி.

**தமிழ்த்தாத்தா உ.வே.சா. தாள் வணங்கி தொடங்குகிறேன் என்னுரையை.**

1863 ஆண்டு மே திங்கள் தஞ்சை மாவட்டம் பாபநாசம் வட்டம் உத்தம தானபுரம் என்னும் சிற்றூரில் ஓர் இல்லத்தில் இதிகாச உபன் யாசகராகவும் வடமொழி வல்லுநராகவும் விளங்கிய ஒரு வைதீக பிராமணர் தன்மகனிடம் உரையாடல் ஒலி கேட்கிறது. அந்தபாலகனுக்கோ வயது எட்டு. தந்தையார் மகனிடம் கோட்கிறார். "நீ வடமொழி பயில்கிறாயா? அல்லது ஆங்கிலம் பயில்கிறாயா? அல்லது தமிழ்மொழி பயில்கிறாயா? எனக்கேட்டார். அந்த பச்சிளம் பாலகன் பதிலுனாக்க வில்லை. அந்த பெரியவர் மீண்டும் அவனிடம், " நீ வடமொழி பயின்றால் மறுமையில் (மேல் உலகத்தில்) சுகமாக வாழலாம் ஆங்கிலம் பயின்றால் இம்மையில் (இந்நிகழ்காலத்தில்) சுகமாக வாழலாம். நீ எந்த மொழி பயில்கிறாய் எனக் கேட்டார். அந்த பாலகனோ,சிறிது நேரம் சிந்தித்விட்டு, நான் தமிழ்மொழி பயில்கின்றேன், ஏனெனில் எவ்விடத்திலும் சுகமாகவாழ தமிழ்மொழி பயில்கின்றேன் என்றான். அந்த பாலகன்தான் தமிழ்த்தாத்தா உ.வே.சா.அந்த பெரியவர்தான் அவரின் தந்தை தான் வெங்கடகப்பையர் அருகில் நின்றவர்தான் அவரின் தாயார் சரசுவதி அம்மாள்

இளமையிலேயே ஆராத பற்றும் ஆழமான சிந்தனையும் உள்ள இம்மாமனிதர் உ.வே.சா பற்றிய சில செய்திகளை உங்களோடு கலந்துரையாடலாம் எனக்கருதுகிறேன்.

தன் மகனிடம் உள்ள ஆழமான உறுதியான தமிழ்ப்பற்றை உணர்ந்த தந்தையர் அவரின் விருப்பபடியே தமிழ்மொழி கற்க கூறினார்.

இளம் பருவத்தில் தன் தந்தையிடமே தமிழும் இசைக்கலையும் பயின்றார். தொடக்க கல்வி தன் தந்தையாரிடமே அமைந்தது. நிகண்டு, சதகம் முதலியவற்றை தந்தையாரிடம் பாடம் கேட்டார்.

உ.வே.சா தந்தையார் தன்மகன் விருப்பத்திற்கு மாறாக வடமொழியோ, ஆங்கிலமோ கற்கச் செய்திருந்தால் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு பெரும் இழப்பு. ஈடு செய்யமுடியாத இழப்பு ஏற்பட்டிருக்கும். தமிழ்க்கடவுள் பெயர் கொண்ட உ.வே. சாமிநாதன் தமிழ் பழைய இலக்கியங்களுக்கு உயிரூட்டினார் என்றால் அதற்கு மாற்றுக் கருத்து இல்லை என்றே கூறலாம்.

உ.வே.சாவிற்கு வயது 17 ஆயிற்று தமிழ்மொழியை மேன்மையுற பாடங்கேட்க திருவாடுதுறை ஆதீன திவானாக பணிபுரிந்த மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் சென்றார். அவரிடம் முறையாக ஆறு ஆண்டுகள் தமிழ்ப்பாடம் கேட்டார். அதன் பின் பெரும்புலவர் சுப்பிரமணியம் பிள்ளையிடம் தமிழ்பாடம் கேட்டார்.

1880 ல் கும்பகோணம் அரசு கலைக்கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராக பணியாற்றிய தியாகராச செட்டியார் கல்லூரியிலிருந்து பிரியும் பொழுது தன் பணிக்கு உ.வே.சா. அவர்களை நியமனம் செய்ய செய்தார். 16.2.1880 முதல் குடந்தை அரசுக்கல்லூரியிர் துறைத் தலைவராக பணியற்றினார். இக்காலத்தில் தான் ஓலைச் சுவடிகளை கண்டறிந்து ஆய்ந்து பதிப்பித்து உரை எழுத எண்ணம் ஏழுந்தது. இதுவே அவரது வாழ்க்கையின் திருப்புமுனை.

பின்னர் கும்பகோணத்திலிருந்து சென்னை மாநிலக்கல்லூரி பேராசிரியராக பணியாற்றினார். இவர் அக்கல்லூரில் பணியேற்பதற்கு முன்னர் மாணவர்கள் தமிழை மருந்தென எண்ணியிருந்தனர் உ.வே.சா அவர்கள் தமிழை விருந்தென மாற்றி தமிழக்கு உயர்சிறப்பினை அக்கல்லூரியில் ஏற்படச்செய்தார்.

இக்காலக்கட்டத்தில் உ.வே.சா . எப்படி இருப்பர் தெரியுமா? நெடிய உருவம், சாந்தமான பார்வை சிறிய தொந்தி, மெத்தென்ற நடை, இன்சொல் எப்போது தமிழைப் பற்றியே பேச்சு. தூய பஞ்சகச்ச வேஷ்டி, இதுதான் உ.வே.சாவின் வடிவம், இதனை தங்கள் உள்ளத்தில் அப்படியே நிர்மாணம் செய்துபாருங்கள், அவரை யார் பார்த்தாலும் பெரியவர் என்று எண்ணும் வகை தோற்றம்.

இத்தகு ஏழில் மிகு தோற்றம் கொண்ட உ.வே.சா 1919 ல் ஓய்வு பெற்றார். இது காறும் தமிழ்ப் பணியை கல்லூரி பேராசிரியராக, துறைத்தலைவராக செய்த உ.வே.சா, ஓய்வுக்கு பின் தன் தமிழ்த் தொண்டினை முழுநேரமும் ஆற்றினார்.

தமிழ் ஏட்டுச் சுவடிகள் தமிழகத்தின் பல்வேறு பகுதியில் பரந்து கிடந்தன, சைவமடங்கள், ஜமின்தார்கள், புலவர்கள், புரவலர், பெருநிலக்கிழார்கள், வைதீக உபன்யாசகர்கள் என்று பலரிடம் இருந்தன, இப்பழைய ஏட்டுச்சுவடிகள். அதனை எங்குளது? எவரிடம் உளது என அறிந்து அங்கு சென்று அதனை பெற அவர் பட்ட துன்பங்கள் கொஞ்சநஞ்சமல்ல இருக்கும் இடங்களே வெவ்வேறானவை, அதனை வைத்திருப்பவர்கலோ வெவ்வேறானவர்கள். இத்தகைய நிலையில், போக்கு வரத்து வசதியில்லாத நிலை இவற்றை சேகரித்தல் என்பது நினைத்துக் கூட, பார்க்க இயலாது. இதனை சேகரிக்க பொறுமை, உழைப்பு, நுண்ணறிவு, விடாமுயற்சி, சகிப்புத்தன்மை, கொண்ட கொள்கையில் உறுதி, இத்தகு பண்பு நலங்கள் ஒருங்கே உ.வே.சா இடம் இருந்தமையில் தான் அவரால் இத்தகு அரிய செயலை செய்து முடிக்க முடிந்தது.

ஒரு சமயம் திருக்குறளின் பழைய ஏடுகள் வரகுண பாண்டியன் மன்னைனிடமிருந்து அது பொய்கை நல்லூர் திருக்கோவில் உள்ளது என செய்தி அறிந்து பொய்கை நல்லூர் சென்று திருக்கோவில் அறங்காவலரிடம் ஏட்டுச் சுவடிகள் கேட்டார். அதற்கு அந்த அறங்காவலர், பழைய ஏட்டுச் சுவடிகளை ஆகுதியில் இடம் வேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன, அதனால் ஆகுதியில் (தீயில்) இட வேண்டும் என்றார். உ.வே.சா. எந்த ஆகமத்தில் ஆகுதியில் இடவேண்டும் என்று கூறியுள்ளது அப்படி கூறியிருந்தால் அந்த ஆகமங்களை தான் ஆகுதியில் இடவேண்டும் என்று ஆவேசமாக கூறியதாக ஒரு தகவல் கூறுகிறது.

இதுபோல் பலரிடம் கேட்டபோது ஆற்றில் விட்டுவிட்டோம் ஆகுதியில் விட்டுவிட்டோம் என்று சொன்னபோது துடிதுடித்தார். இந்த மூடச்செயல்களால் தமிழ் இலக்கியங்கள் அழிந்ததே என்று அல்லல் பட்டார் ஆதங்கப்பட்டார். எனினும் அவர் முயற்சியை கைவிடவில்லை.

திருவாடுதுறை திருப்பனந்தாள், தருமபுரம் ஆகிய மடங்களுக்கு சென்று ஓலைச் சுவடிகளை தேடினார். அன்றைய ஆட்சிக்காலம் ஆங்கிலேயர் ஆட்சிக்காலம். வடமொழியும் ஆங்கிலமும் மட்டுமே கோலோச்சிய காலம் தமிழ் படிக்க எவரும் முன்வரவில்லை. அதனால் அவற்றைப் பாதுகாப்பதற்கும் எவரும் முன் வரவில்ல. இது தான் உண்மை நிலை.

தருமபுர ஆதீனம் ஸ்ரீ மாணிக்க வாசகதேசிகர் ஆதீனத்தில் இருந்த 50க்கு மேற்பட்ட ஓலைச் சுவடிகளை உ.வே.சா விடம் கொடுத்து உதவினார்.

தமிழ் நாட்டில் பட்டி தொட்டி எங்கும் மூலை முடுக்கெல்லாம் சென்று தேடினார். சைவ மடங்களுக்கு சென்று தேடினார், தேடினார் தேடினார் தேடிக் கொண்டே இருந்தார்.

கிடைத்த ஓலைச் சுவடிகளை படித்து ஆய்ந்து முறைப்படி எழுதி பதிப்பிக்க ஆயத்தப்படுத்தினார் கிடைத்த நூல் சுவடிகளில் காணப்படுவன பற்றி ஆய்வு நடத்தினர். பல்வேறு புலவர்களிடம், தமிழ் மக்களிடம் கேட்டு தெளிவு பெற்றார் முத்துப்பிள்ளை ஒரு சலவையாளர். அவரை எல்லோரும் வண்ணாரப் பரதேசி என்று சொல்வார்கள். அவர் பல தலங்களுக்கு சென்று அதன் சிறப்பையும் அத்தல செய்திகளையும் அறிந்தவர். இதனைக் கேள்வியுற்ற உ .வே.சா. திருவிடைமருதூரில் அவரைச் சந்தித்து அவரிடம் உரையாடி பல செய்திகளை கேட்டு குறிப்பெடுத்து தன் உரைக்கு பயன்படுத்தினர் என்று ஒரு தகவல். இவ்வாறு ஓலைச் சுவடிகளை கண்டறிதலிலும், அதனை ஆய்ந்து பதிப்பித்து உரை எழுதுவதிலுமே தன் வாழ் நாளை கழித்து வந்தார்.

1924-27 சிதம்பரம் அண்ணாமலை பல்கலை கழகம் மீனாட்சி தமிழ்க் கல்லூரியில் முதல்வராக பணியாற்றினர்.

கும்பகோணம் அரசு கல்லுரியில் பணியாற்றிய பொழுது கும்பகோணம் முன்சீப் ராமசாமி முதலியார் எனும் பெரியவரின் நட்பு கிடைத்தது. அந்த நண்பர் உ.வே.சாவிடம் ஓலைச் சுவடிகளை அளித்தார். அது சீவகசிந்தாமணி எனும் காப்பிய ஓலைச் சுவடிகளாக இருந்தது.
அதன ஆய்ந்து சீவக சிந்தாமணி எனும் நூலை முதன் முதலாக எழுதினார். அதுஜைன காப்பியம். அக்காப்பியத்தில் முழுமையாக தெளிவு பெற கும்பகோணத்தில் வாழ்ந்த ஜெயின் சமூகத்தினரிடம் தொடர்பு கொண்டு கேட்டு சந்தேகங்களுக்கு தீர்வு கண்டார்.

1887ல் முதன் முதலாக சீவக சிந்தாமணி நூலைப்பதிப்பித்து வெளியிட்டார். இந்நூல் பதிப்பித்து வெளியிட உ.வே.சா.விற்கு உதவியவர் கும்பகோணம் முன்சீப் ராமசாமி முதலியார் ஆவார். அதன் பிறகு பத்துப் பாட்டு, சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, ஐஞ்சிறுகாப்பி யங்கள் திருத்தணிகை உலா நன்னூல் திருவிளையாடற் புராணம், தமிழ் விடுதூது போன்ற 90 நூல்களை பதிப்பித்து வெளியிட்டார். சங்கநூல்கள், போன்ற நூல்கள் மட்டுமன்றி சிறிய பதிகங்கள் வரை பதிப்பித்து வெளியிட்டார்.

உ.வே.சா அவர்களுக்கு இறக்கும்வரை அவருடன் இருந்து உதவியவர் S.V தாமோதரம் பிள்ளை.

1940 ல் என் சரித்திரம் என்னும் நூலை எழுதினார். இந்நூல் அவர் சரித்திர மட்டுமல்ல தமிழின் வரலாறு, தமிழ்ப் புலவர்களின் வரலாறு தமிழ்ப் புரவலர்களின் வரலாறு தமிழ்ச் சான்றோர்களின் வரலாறு. இது தமிழ் இலக்கிய வரலாற்றின் திறவுகோல். ஒரு கருவூலம். 28.4.1942ல் 87வது வயதில் திருக்கழு குன்றத்தில் இறைவன் திருவடிப் பேறு பெற்றார். உ.வே.சா என் சரித்திரம் முடிவுறா நிலையல் இருந்தது. அவரது மகன் கொடுத்த, தன் தந்தையாரின் குறிப்புகளை கொண்டு, உ.வே.சா வின் மாணவர் செந்தமிழ் காலநிதி கி.வா.ஐ. அவர்கள் என் சரித்திரம் நூலை நிறைவு செய்து வெளிவந்தது.

உ.வே.சா பதிப்பித்து வெளியிட்டநூல் 90 சேகரித்த ஓலை சுவடிக் 3067 (Paper manuscripts and palm leaf manuscripts).

1906 ல் மகா மகோபாத்யாய விருது. சென்னை அரசு, வழங்கியும் 1932 சென்னை பல்கலை கழகம் தமிழ் இலக்கிய அறிஞர் விருது வழங்கி கௌரவித்தது.

உ.வே.சா அவர்களுக்கு தெக்ஷிணகலாநிதி விருது வழங்கு விழாவில் வேல்ஸ் துரை அவரது மனைவியாரோடு வந்து வாழ்த்தியது பெருமைக்குரியதாகும்.

**வாழ்க்கையில் நடந்த சில நிகழ்வுகள்:**

பாரதீய சாகித்ய பரிஷத்தின் மாநாடு சென்னையில் நடந்தபோது வரவேற்புக் குழுத்தலைவர் உ.வே.சா அவர்கள் மாநாட்டின் சிறப்பு விருந்திரைய் மகாத்மா காந்தியடிகள் உ.வே.சா வின் உரையைக் கேட்டு காந்தியடிகள், " இந்த பெரியவரின் அடியவரின் அடி நிழலில் இருந்த வண்ணம் நான் தமிழ் கற்க வேண்டுமென்ற ஆர்வம் மிகுதிதான் என் உள்ளத்தில் எழுகிறது என்று பாராட்டினார்.

உ.வே.சா நூல் வெளியிட பொருள் வசதி இல்லாமையால் புத்தகம் வெளியிட மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் தர 500 பேர் சேர்ந்தால் வெளியிடலாம் என நினைத்து செயல் பட 500 பேர் கிடைக்கவில்ல்லை.

திருப்பனந்தால் மடம் எசமான் சுவாமிகள் சாமிநாத தம்பிரான், கொட்டையூர் சிவக் கொழுந்து தேசிகர் பரம்பரையில் வந்தவர். அவர் கோடிச்சுர கோவை, தஞ்சை பெருவுடையார் உலா, சரபோஜி பூபாலக் குறவஞ்சி என்ற மூன்று நூல்கள் எழுதியிருந்தார் அவற்றை அழகிய முறையில் பதிப்பித்து வெளியிட்டதோடு, திருப்பனந்தாள் முதல்வர் குமரகுருபா சுவாமிகள் பிரபந்தங்களையும் குறிப்புரையுடன் வெளியிட்டார் உ.வே.சா. இது அறிந்த எசமான் சுவாமிகள் பிறந்தகுலம் உயர்த்தி விட்டீர் . புகுந்தமடம் சிறப்பை உயர்த்தி விட்டீர் என்று நன்றியோடு ரூ.1000 சன்மானம் வழங்கினார்.

திருவாடுதுறை ஆதீன கர்த்தர் ஒரு வழக்கில் இருக்கும் போது பொதுமக்களும் சான்றோர் பெருமக்களும், புலவர், புரவலர் பெருமக்கள் அனைவரும் இணைந்து ஒரு மனு தயாரித்து அனைவரது கையொப்பம் பெற்று நீதிபதியிடம் தர எண்ணி அவ்வண்ணமே செய்தனர். உ.வே.சா அவர்கள் தனியே ஒரு மனு தயாரித்து அதனையும் இணைந்து நீதிபதி அவர்களிடம் அளித்தனர். நீதிபதி தீர்ப்பு கூறுகிற போது உ.வே.சா வின் கடிதம்என்னை மாறுதலை அடைய செய்தது என்று குறிப்பிட்டு நல்ல தீர்ப்பை ஆதீனத்திற்கு சாதகமாக வழங்கினார்.

1938 ல் தமிழக அரசில் சுப்பராயன் கல்வி மந்திரியாக இருந்தார் இந்தி எதிர்ப்பு போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்த காலம், கல்விமந்திரி உ.வே.சாவிடம் இந்தி பற்றி கருத்து கேட்ட போது உ.வே.சா.

இந்திபடிப்பதில் தவறில்லை ஆனால் அதனை கட்டாய பாடமாக்க கூடாது என்றார்.

உ.வே.சா இறப்பு செய்தி கேட்டு தமிழ் உலகம் கண்ணீர்விட்டது. பாரதி முதல் பல அறிஞர்கள் உ.வே .சா பற்றி கவிதைகள் இயற்றினர் அவற்றல் சில.

பாரதி, உ.வே.சா அவர்களை கும்பமுனி (அகத்தியர்) என்று பாராட்டிபாடினர்.

பொதிய மலை பிறந்த தமிழ் வாழ்வறியும்
காலமெலாம் புலவர் வாயில் துதியறிவாய்
அவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய் இறப்பின்றி
துலங்குவாயே.

என்றான் பாரதி.

சங்கநூல் எங்கே ? தமிழ் பழமைதான் எங்கே ?

நங்கள் பிரானாம் சாமி நாதகுரு - இங்கே
பிறந்திலனேல் எத்தனயோ பீடுடைய நூல்கள்
இறந்திருக்கும் அல்லவோ இன்று

என்றான் ஒரு தமிழறிஞர்

சந்தமறைக் குலக்கொழுந்தே நாலுழவ கலையரசே
சாமிநாதா
மைந்தர்களை இனத்தவரை மனைமுதலாம் பலபொருள்களை
மற்றும் உள்ள
சிந்தைநிரம் பண்பினரை தீர்த்தத்தை ஆலயத்தை
தீர்ந்தாயேனும்
நந்தலிலா தமிழ் ஏட்டுச் சுவடிகளை நயவரது
நடந்த தென்னே
காணாத நூல்கள் கண்டேடுக்க வல்லார் யார்?
கண்டேடுத்தும்
மாணாத பாடமறிக் தொதுக்க வல்லார் இனியார்?
மற்ற நூலின்
கோணாத கருத்தையறிந்து உரையியற்றி எங்களுக்கு
கொடுப்பார் யாவர்?
வாணாளை தமிழ்க்களித்து வருசாமி நாத எங்கு
மறைந்தாய் நீயே

இது யாழ்ப்பாணம் க.நவ நீத கிருஷ்ணன் இரங்கற்பா.

இறுதியாக தமிழ்த் தாத்தாவுக்கு பிடித்தது தமிழ் விடுதூது

இருந்தமிழே உன்னால் இருந்தேன் - இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"

இதனை உ.வே.சா வெண்பாவாக மாற்றி தமிழ்த்தாயின் கடைக்கண் பார்த்து சுவடிகளை பதிப்பிக்க அருள்புரிய வேண்டுகிறார்.

இருந்ததமிழே உன்னால் இருந்தேன் - இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன் - திருந்த"
உதிப்பித்த பன்னூல் ஒளிர அடியேன்

பதிப்பிக்கவே கடைக்கண் பார்.

என்றார் உ.வே.சா.

உ.வே.சா தொண்டு தொடர தமிழ்பல்கலைகழகம் சுவடி இணையதலா சேவை செம்மையாக நடத்தி தமிழ் உலகிற்கு தொண்டு புரிகிறது என்பது தான் நாம் உ.வே.சா விற்கு காட்டும் நன்றி.

**வாழ்க: உ.வே.சா புகழ்**